# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,899 — 1931 ம் ஹூ மார்கழிமீ 23 ந் திகதி, புதன்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

---

### அரசாட்சியாரின் தேவைக்காகிய காணி விளம்பரம்.

1876 ம் ஹூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் மகாமோதரையில் மலசலங் கழிக்க என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 14,378. குறிச்சி—மகாமோதரை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | சின்னத்தம்பிகேவத்தை அல்லது பிருன்சகாற யாகேவத்தை, வரிப் பணம் நொ. 55 ல் பகுதி | 17 தென்னமரம் உள்ள தென்னந்தோட்டம் | (1) எஸ். ஏ. சீ. அப்துல் காதர் ; (2) எம். ஏ. காதர் ; (3) எஸ். ஏ. சீ. கபீல் ; (4) எஸ். எல். எம். கனீபாவுடைய மனைவி ; (5) சிறீமதி கற்றிஜா காதர் ; (6) எஸ். ஏ. சீ. டீன், எல்லாரும் கோட்டை, காலி ; (7) எம். தாசிம் ; (8) எம். ஏ. தாசிம் ; (9) ஏ. சீ. தாசிம்உடைய மனைவி ; (10) சிறீமதி ஏ. தாசிம் ; (11) சிறீமதி எஸ். தாசிம் ; (12) சிறீமதி எம். தாசிம்; (13) எஸ். எஸ். அப்துல்காதர்உடைய மனைவி எல்லாரும் கோட்டை, காலி ; (14) எவ். எம். டீன், கோட்டை, காலி ; (15) எம். எம். கலீமாவுடைய மனைவி ; (16) எஸ். எம். கடிஜா உடைய மனைவி ; (17) எம். ஜே. பாதும்மா உடைய மனைவி எல்லாரும் கோட்டை, காலி. | 0 0 16·44 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் மந்திராலோசனைச சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதி யவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1932 ம் ஹூ தை மாசம் 29 ந் தேதியிலன்று 10 மணிக்கு காலிக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக் காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடதிற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

காலிக் கச்சேரி,
1931 ம் ஹூ மார்கழிமீ 18 ந் வ.

ஜே. டீ. பிறவுண்,
தென் மாகாண அரசாட்சி ஏசண்டு.

363——J. N. 15874–122 (12/31)

T 1

## உத்தியோக சம்பந்தமில்லாதவரின் அறிவித்தல்.

### நோட்டீஸ்.

குருணாகலை டிஸ்திரிக் தம்பதெனிஹத்பத்துவே உடுகஹாபஸ்ணுஇர கோறளை மாரவிற்றயில் இருக்கும் அதிகாரி முதியான்ஸலாகே கிரிபண்டா திலகரத்ன ஆகிய நான் இலங்கை அரசாட்சியின் 1907 ம் ௵ 1 ம் இலக்கச் சட்டத்தின் செடியூல் IB ன் 2 ம் பிரமாணத்தின்படி இன்று துவக்கம் 3 மாசத்துக்குபின் காலி டிஸ்திரிக்கில் சிங்கள பாஷையில் பிரசித்த நொத்தாரிஸ்வாக வேலை பார்க்கிறதற்கு ரிஜிஸ்ரூர் ஜெனறல் அவர்களுக்கு மனுச்செய்வேனென்று இத்தால் விளம்பரப்படுத்துகிறேன்.

இப்படிக்கு,
ஏ. எம். கே. திலக்கரத்ன.

1931 ம் ஆண்டு ஒக்ரோபர்௴ 8 ந் திகதி.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.